# <u>சீர்காழி நகராட்சி</u>



**2025-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ஆம் தேதி நாள்.15.12.2025 திங்கட்கிழமை காலை. 11.00 மணிக்கு நகர்மன்ற கூடத்தில் அவசரக் கூட்டம் நடவடிக்கை.**

**திருமதி.R.துர்காபரமேஸ்வரி.MBA.,**
**நகர்மன்றதலைவர்,**
**சீர்காழிநகராட்சி.**

| | | |
|---|---|---|
| பொருள் எண்-1 | மாண்புமிகு **தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்களால் 14.08.2025 அன்று கீழ்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.<br>தூய்மைப் பணியாளர்கள் தங்களது பணியை அதிகாலையில் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் காலை உணவு சமைப்பதற்கும், அதனை பணிபுரியும் இடத்திற்கு கொண்டு வந்து அருந்துவதற்கும் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இப்பிரச்சனைகளுக்கு தீர்வாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தூய்மைப் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு காலை உணவு அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளால் இலவசமாக வழங்கப்படும். இத்திட்டம் முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு, படிப்படியாக மற்ற நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அரசாணை (4ப) எண் 56. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(ந..நி.3) துறை நாள் 21.11.2025ல் நகராட்சிகளில் தூய்மைப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பணியாளர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு நாள்தோறும் உணவு வழங்கும் திட்டத்தினை செயல்படுத்திட அரசு நிருவாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டது. அதன்படி சீர்காழி நகராட்சியில் தூய்மைப் பணியில் ஈடுபடும் அனைத்து பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கிட கீழ்கண்ட விவரப்படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. | தீர்மானஎண்:1380<br>நாள்: 15-12-2025<br>அலுவலகக்குறிப்பு:<br>மேற்கண்ட நகர்மன்ற பொருள் விவாதம் செய்யப்பட்டது. விவாதத்தில் நகர்மன்ற உறுப்பினர் (திமுக) 15வார்டு ஒப்பந்தத்தில் வெளிப்படைத்தன்மை இல்லை. அந்தந்த 3 ஒப்பந்ததாரர்களையும் அழைத்து ஒப்பந்தம் பிரிக்கப்படவில்லை எனவும், குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரிய மேற்கண்ட ஒப்பந்ததாரர் விபரம் மட்டும் மன்றப்பொருளில் இடம் பெற்றுள்ளது. அதிகமாக ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரர் விபரங்கள் மன்ற |

**அட்டவணை-அ**

| வ. எண். | தூய்மைப் பணியில் ஈடுபடும் அனைத்து பணியாளர்களின் எண்ணிக்கை | காலை உணவு எண்ணிக்கை | உணவு பொட்டலம் ஒன்றுக்கு ரூ | மாதம் ஒன்றுக்கு ரூ | வாகனம் வாடகை தொகை ரூ (மாதம் ஒன்றுக்கு) | மொத்த கூடுதல் தொகை ரூ (ஆண்டுக்கு) |
|---|---|---|---|---|---|---|
| 1. | 132 | 132 | 39.00 | 1879020 | 23870 | 1998035 |
| மூன்றாண்டுகளுக்கு (5சதவீதம் கூடுதல் மதிப்பீட்டு தொகையுடன்/ 5 சதவீதம் ஜிஎஸ்டி உள்பட) | | | | | **ரூ.6298806** | |

மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் திட்டத்தினை உடன் செயலாக்கம் மற்றும் பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களால் ஒருங்கிணைந்த ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பானது தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்காணும் பணிக்கு 21.11.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் விவரம் கீழ்கண்டவாறு,

**அட்டவணை-ஆ**

| வ எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் விபரம் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விலை (நபர் ஒன்றுக்கு) |
|---|---|---|---|---|
| 1. | சீர்காழி நகராட்சியில் சுகாதாரப் பணியாளர்களுக்கு 3 வருட காலத்திற்கு காலை உணவு வழங்கும் திட்டம் | 69.61 | ஸ்ரீ நிவாசா கஃபே, சீர்காழி. | 43.00 |

மேற்காணும் காலை உணவு திட்டப்பணியினை மேற்கொள்வதற்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் நபர் ஒன்றுக்கு ரூ.43.00 என குறைவாக அளித்துள்ள ஸ்ரீநிவாசா கஃபே, சீர்காழி நிறுவனத்திற்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** :-

1. அட்டவணை அ மற்றும் ஆ விவரங்களை மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருளில் இடம் பெறவில்லை என்று விவாதம் தொடங்கப்பட்டது. அதனை தொடர்ந்து வார்டு 20,22 உறுப்பினர்கள் விவாதத்தில் ஈடுப்பட்டார்கள் அவர்களும் சட்டத்திற்குட்பட்டு இந்த மன்றபொருள் வெளிப்படைத்தன்மை இல்லை எனவும் ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்தங்கள் நடந்ததில் வெளிப்படைத்தன்மை இல்லை என விவாதித்தார். அதனைத் தொடர்ந்து மன்றக்கூட்டத்தில் பெரும்பான்மை கருத்துக்கணிப்பு கேட்கப்பட்டது. திமுக கவுன்சிலர் 17,16,7,23,10,3,2,14,9,15 ஆகியவர்களும், தேமுதிக கவுன்சிலர் 20, பாமக கவுன்சிலர் 22 ஒப்பந்தத்தை ரத்து செய்யகோரி மன்றத்தில் கோரினார்கள். ADMK கவுன்சிலர்கள் 11,6,4,5,1,8 ஆகிய கவுன்சிலர்கள் ஆதரித்தும் கோரினார்கள் பெரும்பான்மையான கவுன்சிலர்கள் ஒப்பந்தத்தை ரத்து செய்யக் கோரியதால், மாண்புமிகு

<table>
<tr>
<td></td>
<td>
2. மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீநிவாசா கஃபே, சீர்காழி. நிறுவனத்தின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.<br>
3. மேற்காணும் பணிகளுக்கு பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்தை இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேலும்,அடுத்தடுத்த ஆண்டுகளுக்கான 5 சதவீதம் கூடுதல் மதிப்பீட்டு தொகையுடன்/ 5 சதவீதம் ஜிஎஸ்டி தொகை அட்டவணை அ-ல் கண்டவாறு செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>
4. பணியாளர் நலனை கருத்தில் கொண்டும் பணிபுரியும் அந்தந்த பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான நான்கு இடங்களில் உணவு வழங்கிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க. எண். 1879/2025/இ1
</td>
<td>தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நல்லத்திட்டத்தை செயல்படுத்தும் நோக்கத்தில் ஒப்பந்தத்தை ரத்து செய்து குறுகியக்கால ஒப்பந்தத்தை அறிவித்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரி இத்திட்டத்தை விரைவில் தகுதியுள்ள, வெளிப்படைத்தன்மை யுடன் ஒப்பந்தத்தை செயல்படுத்திட மன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டு மறு ஒப்பந்தப்புள்ளி கோரி குறுகியக்கால ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-2</td>
<td>
சீர்காழி நகராட்சி முதலமைச்சரின் விரிவான காலை உணவு திட்டம் (பகுதி I மற்றும் II) 2025- 26 ன் கீழ் அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகளுக்கு 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு 1 ஆண்டுக்கு மாணவர்களுக்கு உணவு தயாரித்து வழங்கும் பணிக்கு (Service Provider) ரூ. 45. 52 இலட்சம் மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ள 24.10.2025 அன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ளன.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த மதிப்பீட்டை விட ரூ.</th></tr>
<tr><td>1</td><td>அரும்பு சுய உதவி குழு<br>சீர்காழி</td><td>(-) 0.08% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>R. தனராஜ், ஒப்பந்த்தார ர்<br>சீர்காழி</td><td>(+) 6.22% அதிகம்</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண்-1ல் உள்ள அரும்பு சுய உதவி குழு , சீர்காழி, இன் (-)0.08% மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தபுள்ளியினை ஏற்று மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
</td>
<td>தீர்மானஎண்:1381<br>நாள்: 15-12-2025<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு</u>** : 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2 . நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள பணி<br>உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்-1879/2025/இ1 | |
| பொருள் எண்-3 | அரசாணை நிலை எண்.119 மற்றும் அரசாணை எண்.120, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.06.2025-ன் வழிகாட்டுதலின் படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.13933/2022/எம்ஏ2 நாள்.30.06.2025ம் மற்றும் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயலாணை கடித ந.க.எண்.1271/2025/அ5 உ.இ(ஊ) நாள்.24.09.2025ம் தேதிய உத்திரவின்படி, நகர்மன்ற உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் நகர்மன்றத்தில் நியமன உறுப்பினர்களை நியமனம் செய்வது தொடர்பாக தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்களை பெற்று மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையிலான மாவட்ட அளவிலான குழுவில் சமர்பிக்கப்பட்டு அக்குழு அரசாணை விதி முறைகளின்படி, சீர்காழி நகராட்சி மன்றத்திற்கு தகுதியான ஒரு நபரை தேர்வு செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.13933/2022/எம்ஏ2 நாள்.24.11.2025-ம் தேதிய கடிதத்தில் சீர்காழி நகராட்சி நகர்மன்றத்திற்கு உறுப்பினராக **திரு.ஆர்.சுரேஷ்குமார், த/பெ ரெங்கநாதன்**, 111, பிடாரி தெற்கு வீதி, சீர்காழி என்பவரை மாற்று திறனாளி உறுப்பினராக நியமனம் செய்து சான்று அளிக்கப்பட்டுள்ள விபரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**. மன்றம் பதிவு செய்யலாம்.<br>ந.க.எண்.1306/2025/சி1 | தீர்மானஎண்:1382<br>நாள்: 15-12-2025<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

(ஒம்) திருமதி.R.துர்காபரமேஸ்வரி.MBA.,
நகர்மன்றதலைவர்,
சீர்காழிநகராட்சி.

# சீர்காழி நகராட்சி



**2025-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 – ஆம் தேதி நாள்.30.12..2025 செவ்வாய் கிழமை காலை. 11.00 மணிக்கு நகர்மன்ற கூடத்தில் சிறப்புக் கூட்டம் நடவடிக்கை.**

திருமதி.R.துர்காபரமேஸ்வரி.MBA.,
நகர்மன்றதலைவர்,
சீர்காழிநகராட்சி.

பொருள் எண் -1

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்களால் 14.08.2025 அன்று கீழ்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

தூய்மைப் பணியாளர்கள் தங்களது பணியை அதிகாலையில் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் காலை உணவு சமைப்பதற்கும், அதனை பணிபுரியும் இடத்திற்கு கொண்டு வந்து அருந்துவதற்கும் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இப்பிரச்சனைகளுக்கு தீர்வாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தூய்மைப் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு காலை உணவு அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளால் இலவசமாக வழங்கப்படும். இத்திட்டம் முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு, படிப்படியாக மற்ற நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (4ப) எண் 56.நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(ந..நி.3) துறை நாள் 21.11.2025ல் நகராட்சிகளில் தூய்மைப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பணியாளர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு நாள்தோறும் உணவு வழங்கும் திட்டத்தினை செயல்படுத்திட அரசு நிருவாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டது. அதன்படி சீர்காழி நகராட்சியில் தூய்மைப் பணியில் ஈடுபடும் அனைத்து பணியாளர்களுக்கும் காலை உணவு வழங்கிட கீழ்கண்ட விவரப்படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை-அ**

| வ. எ ண். | தூய்மைப் பணியில் ஈடுபடும் அனைத்து பணியாளர்களி | காலை உணவு எண்ணிக் கை | உணவு ஒன்றுக் கு ரூ | மாதம் ஒன்றுக் கு ரூ | வாகனம் வாடகை தொகை ரூ (மாதம் | மொத்த கூடுதல் தொகை ரூ (ஆண்டுக் கு) |
|---|---|---|---|---|---|---|

தீர்மானஎண் :1383
நாள் :30-12-2025
அலுவலகக்குறிப்பு:
அங்கீகரிக்கப்பட்டது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ன் எண்ணிக்கை | | | | ஒன்றுக் கு) | |
| 1. | 132 | 132 | 39.00 | 1879020 | 23870 | 1998035 |
| மூன்றாண்டுகளுக்கு (5சதவீதம் கூடுதல் மதிப்பீட்டு தொகையுடன்/ 5 சதவீதம் ஜிஎஸ்டி உள்பட) | | | | | ரூ.6298806 | |

மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் திட்டத்தினை உடன் செயலாக்கம் மற்றும் பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களால் ஒருங்கிணைந்த ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பானது தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்காணும் பணிக்கு 21.11.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் விவரம் கீழ்கண்டவாறு,

**அட்டவணை-ஆ**

| வ எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் விபரம் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விலை ( நபர் ஒன்றுக்கு) |
|---|---|---|---|---|
| 1. | சீர்காழி நகராட்சியில் சுகாதாரப் பணியாளர்களுக்கு 3 வருட காலத்திற்கு காலை உணவு வழங்கும் திட்டம் | 69.61 | ஸ்ரீ நிவாசா கஃபே, சீர்காழி. | 43.00 |

மேற்காணும் காலை உணவு திட்டப்பணியினை மேற்கொள்வதற்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் நபர் ஒன்றுக்கு ரூ.43.00 என குறைவாக அளித்துள்ள ஸ்ரீநிவாசா கஃபே, சீர்காழி நிறுவனத்திற்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு** :-

1. அட்டவணை அ மற்றும் ஆ விவரங்களை மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீநிவாசா கஃபே, சீர்காழி. நிறுவனத்தின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
3. மேற்காணும் பணிகளுக்கு பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்தை இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேலும்,அடுத்தடுத்த ஆண்டுகளுக்கான 5 சதவீதம் கூடுதல் மதிப்பீட்டு தொகையுடன்/ 5 சதவீதம் ஜிஎஸ்டி தொகை அட்டவணை அ-ல் கண்டவாறு செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
4. பணியாளர் நலனை கருத்தில் கொண்டும் பணிபுரியும் அந்தந்த பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான நான்கு இடங்களில் உணவு வழங்கிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

கீழ்கண்டவாறு 3 ஒப்பந்தப்புள்ளிகள் tntenders.gov.in Online மூலம் வரப்பெற்ற விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர்களின் விபரங்கள் |
|---|---|
| 1 | ஸ்ரீ நிவாசா கஃபே, சீர்காழி. |
| 2 | திவிஷா மாரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், மயிலாடுதுறை. |
| 3 | R.தனராஜ், ஒப்பந்ததாரர், சீர்காழி . |

மேற்கண்டவாறு வரப்பெற்ற 3 ஒப்பந்தப்புள்ளிகளை 25.11.2025 அன்று தொழில்நுட்ப கூர்ந்தாய்வு குழு மூலம் ஆய்வு செய்யப்பட்டதில் வரிசை எண்.1 ல் உள்ள ஸ்ரீ நிவாசா கஃபே, சீர்காழி. அவர்கள் தொழில் நுட்ப தகுதி வாய்ந்ததாகவும், வரிசை எண் 2 மற்றும் 3 ஆகிய இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் திவிஷா மாரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், மயிலாடுதுறை மற்றும் R.தனராஜ், ஒப்பந்ததாரர், சீர்காழி ஆகியவை தொழில் நுட்ப தகுதி வாய்ந்ததாக இல்லை. எனவே தொழில் நுட்ப தகுதிவாய்ந்த ஸ்ரீ நிவாசா ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

6. **திருத்திய மன்றப்பொருள்** - மேலும் மறு ஆய்வு செய்யப்பட்ட சிறப்பு கூட்ட ஒப்பந்தப்புள்ளி விவரங்களில் மேற்கண்ட வரிசை எண் 1 ல் கண்ட ஸ்ரீ நிவாசா கஃபே, சீர்காழி. என்ற நிறுவனம் வெளிப்படைத்தன்மையுடன் ஒப்பந்தப்புள்ளி அளித்தது உறுதி செய்யப்பட்டது. எனவே திருத்திய சிறப்பு கூட்ட மன்ற பொருளை மறு ஒப்பந்தப்புள்ளி கோராமல் மன்றம் ஏற்கலாம்.

**எண்.**1879/2025/இ1

(ஒம்) திருமதி.**R.**துர்காபரமேஸ்வரி.**MBA.,**
நகர்மன்றதலைவர்,
சீர்காழிநகராட்சி.